# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

SUPEEDSAM
EVERYTHING FOR PEOPLE

செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
www.supeedsam.com

வெள்ளிக்கிழமை 06.09.2024 | supeedsam.com | supeedsam@gmail.com


# சஜித் சமஷ்டி குறித்து வழங்கிய உத்தரவாதம் என்ன?

## தமிழசுக்கட்சியின் ஆதரவு குறித்து எஸ்.சிறிதரன் கேள்வி



இம்முறை ஜனாதிபதித்தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்களில் யார் தமிழ் மக்களுக்கான சமஷ்டி அடிப்படையிலான தீர்வு குறித்த உத்தரவாதத்தை வழங்குகின்றாரோ, அவரையே ஆதரிப்பது என ஏற்கனவே நடைபெற்ற கட்சியின் மத்திய குழுக் கூட்டங்களில் கலந்துரையாடப்பட்ட நிலையில், தற்போது தமிழரசுக்கட்சி ஆதரிப்பதற்குத் தீர்மானித்திருக்கும் சஜித் பிரேமதாஸ சமஷ்டி தீர்வு குறித்து வழங்கிய உத்தரவாதம் என்ன என்று இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

## தமிழரசுக் கட்சியும் ரணிலும் தமிழ் மக்களை முட்டாளாக்கியுள்ளனர்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும், இலங்கை தமிழரசுக் கட்சியும் இணைந்து மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத் திருத்தச் சட்டமூலத்தை விவாதத்திற்குட்படுத்தாது நிறைவேற்றி நாசப்படுத்தியுள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ச குற்றம் சுமத்தியுள்ளார்.

ரணில் மற்றும் தமிழரசுக்கட்சியின் உறுப்பினர்கள் தங்களது சொந்த அரசியல் காரணங்களுக்காக தவறவிட்ட பொன்னான வாய்ப்பு இதுவென நாமல் ராஜபக்ச வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் அந்த அறிக்கையில்,

ரணிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் மாகாண

02 ஆம் பக்கத்தில்...

## வாக்களிப்பினை பகிஸ்கரித்தல் மறைமுகமாக பேரினவாதத்திற்கு துணைபோகும்



வாக்களிப்பினை பகிஸ்கரித்தல் என்பதும் மறைமுகமாக பேரினவாதத்திற்கு துணைபோகும் செயற்பாடாகவே நோக்குவதாக மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் தெரிவித்தார்.

தமிழ் பொதுவேட்பாளருக்கு வாக்களிப்பதன் ஊடாக இந்த நாட்டில் தமிழ் மக்களும் சமஉரிமை பெற்று வாழ வேண்டும் என்பதை நிலை நிறுத்துவதற்காக எதிர்வரும் 21ஆம் திகதி

02 ஆம் பக்கத்தில்...

## சிங்கள மக்களின் பெரும்பான்மை பெற்ற அரசாங்கம் எமக்கு தேவையில்லை



எங்களுக்கு தெற்கு சிங்கள மக்களின் பெரும்பான்மை பெற்ற அரசாங்கமோ அல்லது வடக்கு மக்களின் பங்களிப்பு இல்லாத அரசாங்கமோ தேவையில்லை. வடக்கு, கிழக்கு தெற்கு மக்களின் நம்பிக்கையினை வென்ற ஒரு அரசாங்கமே தேவை என்று தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

02 ஆம் பக்கத்தில்...

## ஜனாதிபதி அதிரடி; நான்கு இராஜாங்க அமைச்சர்கள் பதவி நீக்கம்



உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் நான்கு இராஜாங்க அமைச்சர்களை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பதவியில் இருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளார்.

இராஜாங்க அமைச்சர்களான

02 ஆம் பக்கத்தில்...

## தமிழ் உணர்வுகளை அடுத்த தலைமுறைக்கு ஊட்டுவது வரலாற்றுக் கடமை




தமிழ்ப் பொதுக் கட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளர் பா.அரியநேத்திரனுக்கே தமது ஆதரவு என தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர் பரமசிவம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் அனைவரும் ‘சங்கு’ சின்னத்திற்கு வாக்களித்து தமது வரலாற்று கடமையை நிறைவேற்ற வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

## வேட்பாளர்களுக்கான நேரடி விவாதம்; மார்ச் 12 இயக்கம் தயார்

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் நேரடி விவாதம் எதிர்வரும் 7ஆம் திகதி நடைபெறவுள்ளது. மார்ச் 12 இயக்கம் இந்த தொடர் விவாதங்களை நடத்தவுள்ளது.

முதல் நாள் விவாதத்தில் நான்கு வேட்பாளர்கள் பங்கேற்கவுள்ளனர். ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாச, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வேட்பாளர் நாமல் ராஜபக்ச, சர்வஜன பலய கட்சியின் வேட்பாளர் திலித் ஜயவீர , சுயாதீன வேட்பாளர்

02 ஆம் பக்கத்தில்...

## ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பு குழு குகதாசன் எம்.பி யை சந்தித்து பேச்சு



(ஹஸ்பர் ஏ.எச்)

ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பு குழு பிரதிநிதிகள் நேற்று (05) மாலை இலங்கை தமிழரசு கட்சியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் அவர்களை திருகோணமலையில் உள்ள தமிழரசுக் கட்சி மாவட்டப் பணிமனையில் சந்தித்தனர்.

குறித்த சந்திப்பின் போது நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் நிலவரங்கள் பற்றியும், திருகோணமலை மாவட்டத்தில் தமிழர்கள் எதிர்நோக்கும் பல்வேறு சவால்கள் பற்றியும் கலந்துரையாடினர்.

# துறைநீலாவணைக் கிராமத்திற்கு ஜனாதிபதி ரணில் செயலணி 2024 கிழக்கு மாகாணத் தலைவர் கள விஜயம்

**இ.சுதாகரன்**

ஜனாதிபதி ரணில் செயலணி 2024 கிழக்கு மாகாணத் தலைவரும் தமிழ் உணர்வாளர் அமைப்பின் தலைவருமான க. மோகன் அவர்கள் துறைநீலாவணை மகாவித்தியாலயத்தின் கல்விச் சமுகத்தினர் மற்றும் ஆலயங்களின் பிரதிதிகள், விளையாட்டுக் கழகங்களின் பிரதிதிகளைச் சந்தித்து ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான விளக்கத்தினை வழங்குவதற்காக துறைநீலாவணைக் கிராமத்திற்கு கள விஜயத்தினை அண்மையில் மேற்கொண்டிருந்தார்.

இதன் போது பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பாடசாலையில் காணப்படும் பௌதீக வளப் பற்றாக்குறை பற்றி கூறிய போது அவற்றுள் சிலவற்றை உடனே நிவர்த்தி செய்து தருவதாக உறுதியளித்ததுடன் துறைநீலாவணைக் கிராமத்திலுள்ள விளையாட்டுக்கழகங்களின் தேவையினைக் கேட்டறிந்ததுடன் அவசரமாக பூர்த்தி செய்யக்கூடிய உதவிகளை துரிதமாக நிறைவேற்றுவதாகவும் ஏனைய தேவையினை காலப் போக்கில் செய்து தருவதாகவும் உறுதியளித்தார்.







## ஜனாதிபதி அதிரடி; நான்கு இராஜாங்க

**பிரேமலால் ஜயசேகர (துறைமுக மற்றும் விமான சேவைகள்), இந்திக்க அனுருத்த (மின்சாரம் மற்றும் எரிசக்தி), மொஹான் பிரியதர்ஷன டி சில்வா (விவசாயம்) மற்றும் சிறிபால கம்லத் (நெடுஞ்சாலைகள்) ஆகியோர் இவ்வாறு பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.**

அரசியலமைப்பின் 47(3)(ஏ) பிரிவின்படி ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி குறித்த இராஜாங்க அமைச்சர்கள் நீக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

## வேட்பாளர்களுக்கான நேரடி விவாதம்...

**பா. அரியநேத்திரன் ஆகியோர் கலந்துக் கொள்ளவுள்ளனர்.**

இந்த விவாதத்தில் கலந்து கொள்ள முடியாது என சுயாதீனமாக களமிறங்கியுள்ள வேட்பாளர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அந்த அமைப்புக்கு அறிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தி வேட்பாளர் அனுரகுமார திஸாநாயக்கவின் பங்கேற்பு உறுதிப்படுத்தப்பட உள்ளது.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இந்த விவாதம் நடைபெறவுள்ளது.

இந்த விவாதத்தின் இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்ட விவாதத்தில் 12 வேட்பாளர்கள் பங்கேற்பார்கள் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

விவாதங்கள் 08 மற்றும் 09 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

மார்ச் 12 பிரச்சாரம் மேலும் விவாதத்தின் போது வேட்பாளர்களுக்கு கேள்விகளை சமர்ப்பிக்க வாக்காளர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டது என்றும் கேட்கப்படும் கேள்விகளை ஒரு குழு தீர்மானிக்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## தமிழ் உணர்வுகளை அடுத்த தலைமுறைக்கு ....

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில்,

எம் அன்புக்கினிய தமிழ் மக்களே! ஈழத் தமிழர்கள் கடந்த 15 ஆண்டுகளாக அரசியல் அநாதைகளாக அலைந்து திரிகிறார்கள். நாம் நம்பிய அனைவருமே தேர்தல்களின் பின்னர் எம்மை ஏமாற்றியே வருகிறார்கள். தேர்தலில் வாக்குறுதி கொடுத்த யாருமே அதன் பின்னர் எம்மை மதித்ததில்லை.

இம்முறை எமக்கு ஒரு புதிய தெம்பு பிறந்துள்ளது. வெற்றி பெறப்போவதில்லை எனத் தெரிந்து கொண்டே நாம் ஒரு வேட்பாளருக்கு வாக்களிக்கப் போகிறோம். ஏன் தெரியுமா?

## தமிழரசுக் கட்சியும் ரணிலும் தமிழ் மக்களை...

சபைத் தேர்தலை நடத்த விரும்பவில்லை என்பது தெளிவாக தெரிகிறது. ஒவ்வொரு கட்டத்திலும் 13 ஆவது திருத்தம் பற்றி அவர்கள் உயர்வாகப் பேசினாலும், அவர்களின் நடவடிக்கைகள் வேறுபட்ட நிகழ்ச்சி நிரலை வெளிப்படுத்துகின்றது.

உண்மையைக் கூறினால் என்னை வில்லன் என்று முத்திரை குத்துகிறார்கள். ஆனால் இப்போது, உண்மையான வில்லன்கள் யார் என்பதை மக்கள் காண முடியும்.

நான் தமிழ் மக்களுக்கு உண்மையைச் சொல்கிறேன் ஆனால் ரணில் விக்ரமசிங்கவும் இலங்கை தமிழரசுக் கட்சியும் பொய் கூறிகிறார்கள். ரணிலுக்கும் எனக்கும் உள்ள வித்தியாசம் இதிலிருந்து தெளிவாக தெரிகிறது.

இலங்கைத் தமிழரசுக் கட்சி மீண்டும் மக்களைத் தோல்வியடையச் செய்துள்ளது, ரணில் மீண்டும் தமிழ் மக்களை முட்டாளாக்கியுள்ளார், என அவர் மேலும் கூறியுள்ளார்.

## சிங்கள மக்களின் பெரும்பான்மை பெற்ற அரசாங்கம் ...

தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரச்சாரக் கூட்டம் வவுனியா குருமன்காட்டில் அமைந்துள்ள கலைமகள் மைதானத்தில் இன்று வியாழக்கிழமை (5) நடைபெற்றது.

அதில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

சம்பிக்க ரணவக்க, ரிசாட் பதியூதீன் ஆகியோர் சஜித்துடன் இருக்கின்றனர். சஜித் பிரேமதாச வவுனியாவுக்கும் மன்னாருக்கும் வருகைதரும் போது சம்பிக்க ரணவக்கவை கூட்டி வரமாட்டார். ஆனால், காலிக்கு செல்லும்போது சம்பிக்கவை அழைத்துச் செல்வார். ஆனால், அங்கு ரிசாட் பதியூதீனை அழைத்துச் செல்லமாட்டார். என்ன அரசியல் இது. இதுதான் இரட்டை அரசியல்.

கொள்கை இருப்பது தேசிய மக்கள் சக்தியிடம் மாத்திரமே. நாங்கள் அனைத்து இன மக்களின் உரிமைகளை உறுதிசெய்யும் புதிய ஒரு அரசியலமைப்பை உருவாக்குவோம். பிரதேச சபைகளில் இருந்து அதிகாரப்பகிர்வை வழங்கும்படியான ஒரு அரசியலமைப்பு உருவாக்கப்படும்.

இனவாதத்தினை மூலதனமாக்கி ஆட்சியினை பெற்ற மொட்டு கட்சி இன்று சுக்குநூறாகிப்போயுள்ளது. இனவாதம் சாதிவாதத்துக்கு தேசிய மக்கள் சக்தியில் இடமில்லை. இப்போதே இந்த நாட்டை கட்டியெழுப்ப ஆரம்பிக்கவேண்டும். விவசாயத்தை பாதுகாக்கவேண்டும். உங்கள் ஆபரணங்கள் எங்கே? அவை வங்கிகளில் இருக்கின்றன. எனவே இந்த விவசாய கடன்களைதள்ளுபடி செய்யவேண்டும். விதை ஆராய்ச்சி நிலையங்களை புதுப்பிக்கவேண்டும்.

போதைப்பொருள் பின்புலத்தில் இருப்பது அரசியல்வாதிகளே. அது உங்கள் குழந்தைகளை பாதிக்கும். கிராமத்தை பாதிக்கும். அதனை முழுமையாக நாம் தடுத்து நிறுத்துவோம்.

எங்களுக்கு எவ்வாறான ஒரு அரசாங்கம் தேவை. தெற்கில் சிங்கள மக்களின் பெரும்பான்மை பெற்ற அரசாங்கமா அல்லது வடக்கு மக்களின் பங்களிப்பு இல்லாத அரசாங்கமா? அப்படியான அரசு எமக்கு தேவையில்லை. வடக்கு, கிழக்கு, தெற்கு மக்களின் நம்பிக்கையினை வென்ற ஒரு அரசாங்கமே எங்களுக்குத் தேவை. இதற்கு முந்தைய ஜனாதிபதிகள் உருவானது தெற்கில் இருந்து மட்டுமே. இம்முறை வடக்கு, கிழக்கு, தெற்கு மக்கள் இணைந்து தேசிய மக்கள் சக்தியை வெற்றிபெறச் செய்யவேண்டும். ரணில் கடைசி நேரத்தில் என்ன செய்வாரோ என்று கூறுகின்றனர். ஒன்றுமில்லை. அவர் தோல்வியடைவார். சத்தமில்லாமல் வீடு செல்வார். அது அவருக்கு பழக்கப்பட்ட ஒன்று.

இந்த கள்வர்களை, நாட்டையும் பொருளாதாரத்தையும் சீர்குலைத்தவர்களை, போதைப் பொருள் வியாபாரிகளை, உலகத்திடம் எங்களை அவமானப்படுத்தியவர்களை, போரை உருவாக்கியவர்களை, மூவின மக்களிடையில் சண்டைகளை உருவாக்கியவர்களை என அனைவரையும் ஒன்றாக தோற்கடித்து நாட்டை பசுமையாக்கி மக்களின் வாழ்க்கையினை அழகாக்கும் ஒரு புதிய அரசை கொண்டுவருவதற்காக நாம் பாடுபடுவோம் என்றார்.

## வாக்களிப்பினை பகிஸ்கரித்தல் மறைமுகமாக ...

தமிழ் பொதுவேட்பாளருக்கு வாக்களிக்குமாறு கோருகின்றோம்.

இலங்கை தமிழரசுக்கட்சி ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவுக்கு வாக்களிக்கும் தீர்மானத்தினை அறிவுத்துள்ள நிலையில் அக்கட்சியின் செயற்குழு உறுப்பினரும் மாவட்ட குழுவின் செயலாளருமான ஞா.சிறிநேசன் பொது வேட்பாளருக்கு ஆதரவு தெரிவித்து நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டார்.

மட்டக்களப்பு வாகரை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தட்டுமுனை பகுதியில் தமிழ் பொதுவேட்பாளரை ஆதரிக்கும் வகையிலான பொதுக்கூட்டம் இன்று மாலை நடைபெற்றது.

வாகரை பிரதேச பொது அமைப்புகளின் ஒருங்கமைப்பில் பிரதேச சிவில் க.இராசலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன், தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைவர் அருண்தம்பிமுத்து, முன்னாள் மாகாணசபை உறுப்பினர்களான இரா.துரைரெட்னம், மா.நடராஜா மற்றும் ஜனநாயக போராளிகள் கட்சியின் உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

இந்த கூட்டத்தில் தமிழ் பொதுவேட்பாளருக்கு ஆதரவளிக்கும் வகையில் பெருமளவான மக்கள் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சஜித் சமஷ்டி குறித்து வழங்கிய உத்தரவாதம் என்ன?

அதுமாத்திரமன்றி தீர்வு குறித்த எவ்வித உத்தரவாதமுமின்றி சஜித்தை ஆதரிப்பதென கட்சி பிழையான முடிவை எடுத்து அதன்வழி செயற்படுமேயானால், தானும் தமிழ் பொதுவேட்பாளர் அரியநேத்திரனை ஆதரிப்பது என்ற சரியான தீர்மானத்தில் எவ்வித மாற்றமுமின்றி அதன்வழி பயணிக்கத் தயாராக இருப்பதாகவும் அவர் அறிவித்துள்ளார்.

நாட்டின் ஒன்பதாவது ஜனாதிபதித்தேர்தல் எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், தமிழ் தேசிய பொதுக்கட்டமைப்பினால் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தமிழ் பொதுவேட்பாளராகக் களமிறக்கப்பட்டுள்ளார்.

இருப்பினும் தாம் தமிழ் பொதுவேட்பாளரை ஆதரிக்கப்போவதில்லை எனவும், மாறாக தமிழ் மக்களுக்கான தீர்வு குறித்த உத்தரவாதத்தை வழங்கக்கூடிய ஏனைய பிரதான வேட்பாளர்களில் ஒருவரையே ஆதரிப்போம் எனவும் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கூறியிருந்தார்.

ஆனால் எந்த வேட்பாளரை ஆதரிப்பது என்பது குறித்து கட்சி ரீதியாகத் தீர்மானம் மேற்கொள்வதற்கு முன்பதாகவே கடந்த மாத இறுதி வாரத்தில் தமிழ் பொதுவேட்பாளர் அரியநேத்திரனை நேரில் சந்தித்த தமிழரசுக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், அவருக்குத் தனது ஆதரவினை வெளிப்படுத்தியிருந்தார்.

இவ்வாறானதொரு பின்னணியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (1) வவுனியாவில் நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக்கட்சியின் மத்திய குழுக்கூட்டத்தில் எதிர்வரும் ஜனாதிபதித்தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் போட்டியிடும் சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

ஆனால் அத்தீர்மானம் குறித்து கட்சியின் மத்திய குழுக்கூட்டத்தில் கலந்துகொள்ளாத கட்சியின் சிரேஷ்ட தலைவர் மாவை சேனாதிராஜா கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்த போதிலும், அதற்கு மறுதினம் எதிர்வரும் ஜனாதிபதித்தேர்தல் தொடர்பில் தமிழரசுக் கட்சி எடுத்திருக்கும் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவோம் என அறிவித்தார்.

இது இவ்வாறிருக்க கடந்த மாதம் 29 ஆம் திகதி லண்டன் பயணமான இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன், கட்சியின் மத்திய குழுக்கூட்டம் நடைபெற்ற தினத்தன்று நாட்டில் இல்லாததன் காரணமாக அதில் கலந்துகொள்ளவில்லை.

இந்நிலையில் அவர் மீண்டும் நாடு திரும்பியதன் பின்னர் சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பதற்கு தமிழரசுக்கட்சி எடுத்திருக்கும் தீர்மானத்தை ஏற்றுக்கொள்வாரா? அல்லது கட்சியின் தீர்மானத்துக்குப் புறம்பாக தொடர்ந்து தமிழ் பொதுவேட்பாளர் அரியநேத்திரனுக்கு ஆதரவு வழங்குவாரா? என வினவியபோதே சிறிதரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுபற்றி மேலும் குறிப்பிட்ட அவர், கட்சியின் மத்திய குழுக்கூட்டம் நடைபெறும் திகதி தொடர்பில் 7 நாட்களுக்கு முன்னர்தான் அறிவிக்கப்பட்டதாகவும், அதேபோன்று எதிர்வரும் ஜனாதிபதித்தேர்தலில் எந்த வேட்பாளரை ஆதரிப்பது என்பது பற்றி உரியவாறு கலந்துரையாடித் தீர்மானம் மேற்கொள்ளப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டினார்.

அதேவேளை கட்சியின் கடந்த மத்திய குழுக்கூட்டங்களில் இம்முறை ஜனாதிபதித்தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்களில் யார் தமிழ் மக்களுக்கான சமஷ்டி தீர்வு குறித்த உத்தரவாதத்தை வழங்குகின்றாரோ, அவரையே ஆதரிப்பது எனக் கலந்துரையாடப்பட்டதாகக் குறிப்பிட்ட சிறிதரன், அவ்வாறிருக்கையில் சமஷ்டி தீர்வு குறித்து சஜித் பிரேமதாஸ வழங்கியிருக்கும் உத்தரவாதம் என்ன? என்றும் கேள்வி எழுப்பினார்.

எனவே இவை பற்றிய எந்தவொரு தெளிவுபடுத்தல்களும் இல்லாத நிலையில், தமிழ் பொதுவேட்பாளருக்கு ஆதரவு வழங்குவது குறித்துத் தான் மேற்கொண்ட தீர்மானத்தில் எவ்வித மாற்றமும் இல்லை என சிறிதரன் தெரிவித்தார்.

அதுமாத்திரமன்றி தமிழ் மக்களுக்கான தீர்வு குறித்த எவ்வித உத்தரவாதமுமின்றி சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பதென தமிழரசுக்கட்சி பிழையான முடிவை எடுத்துச் செயற்படும் பின்னணியில், தமிழ் பொது வேட்பாளரை ஆதரிப்பது என்ற சரியான தீர்மானத்தின் வழியில் பயணிப்பதற்குத் தாம் தயாராக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.



# வரலாற்றுச் சிறப்புமிக்க மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய வருடாந்த மகோற்சவம்!!







**எஸ்.எஸ்.அமிர்தகழியான்**

இலங்கையின் பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றாக கருதப்படும் கிழக்கிலங்கையின் வரலாற்று சிறப்புமிக்க மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய வருடாந்த மகோற்சவம் புதன் கிழமை (04) அதிகாலை ஆயிரக்கணக்கான அடியார்கள் சூழ கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

கல் நந்தி புல்லுண்டு போர்த்துக்கீசரை உதைத்து கல்லாகிய அற்புத திருத்தலமாகவும், தானாக தோற்றம் பெற்ற ஆலயமாகவும், கிழக்கு மாகாணத்தின் தேரோடும் ஆலயம் என்னும் பெருமையினையும் கொண்டதாக கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரம் ஆலயம் திகழ்ந்து வருகின்றது.

ஆலயத்தின் பிரதமகுரு சிவஸ்ரீ மு.கு.சச்சிதானந்த குருக்கள்தலைமையில் இந்த மகோற்சவ கிரியைகள் ஆரம்பமானது.

மூலமூர்த்திக்கு அபிஷேக பூசையுடன் விசேட பூசை இடம்பெற்றதனைத் தொடர்ந்து கொடியேற்றத்துக்கான கொடிச்சீலை ஆலயத்தினை சூழ வலம்வந்து கொடிச்சீலைக்கு விசேட பூசைகள் இடம்பெற்றதுடன் வேதபாராயணத்துடன் மேளநாதஸ்வர இசை முழங்க மணியோசைகளின் மத்தியில் பக்தர்களின் அரோகரா ஓசையுடன் கொடியேற்றம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

விவசாயிகள் நிரம்பிய படுவான்கரை மண்ணின் மகத்துவத்துவத்தினை வெளிப்படுத்தும் வகையில் நெற்கதிர்களால் பின்னப்பட்ட கொடிச்சீலை கயிறுகள் கொண்டு கொடியேற்றம் நடைபெற்றமை இந்த ஆலயத்திற்கு மட்டுமே உள்ள சிறப்பாகும்.

இதனையடுத்து தம்பத்துக்கு விசேட அபிஷேகம் இடம்பெற்றதுடன் பூசைகள் இடம்பெற்று சுவாமி உள்வீதி வலம்வரும் நிகழ்வு இடம்பெற்றது.

கிழக்கின் தேரோடும் ஆலயம் என்னும் பெருமையினையும் கொண்ட ஆலயத்தின் தேரோட்டம் எதிர்வரும் செப்டெம்பர் 22ம் திகதி நடைபெறவுள்ளதுடன் 23ம் திகதி தீர்த்தோற்சவம் நடைபெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# அக்கரைப்பற்றில் தபால் மூலமான வாக்களிப்பு



**(எம்.ஏ.றமீஸ்)**

எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு நேற்று இடம் பெற்றது. நேற்றைய தினம் ஆசிரியர்கள், கல்வித்துறை அதிகாரிகள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் போன்றோர் தபால் மூல வாக்களிப்பில் ஈடுபட்டனர்.

அக்கரைப்பற்று கல்வி வலயத்தின் கீழுள்ள பாடசாலை ஆசிரியர்கள், அதிபர்கள், கல்வி சாரா உத்தியோகத்தர்கள் போன்றோர் தாபல் மூல வாக்களிப்பில் மும்மூரமாக ஈடுபட்டதனை அவதானிக்க முடிந்தது. அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியில் ஏற்படுத்தப்பட்ட வாக்களிப்பு நிலையத்தில் சுமார் 50 ஆசிரியர்கள் மற்றும் கல்வி சாரா உத்தியோகத்தர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர். காலை 8.30 மணிக்கு வாக்களிப்பு ஆரம்பமானது. கல்லூரி அதிபரும் கல்வி நிருவாக சேவை அதிகாரியுமான ஏ.எச். பௌஸ் தலைமையில் வாக்களிப்பு இடம்பெற்றது.

அக்கரைப்பற்று கல்வி வலயத்தின் கீழ் இம்முறை 746 பேர் தபால் மூலம் வாக்களிப்பதற்கான தகுதியினைப் பெற்றுள்ளனர். இதற்கமைவாக, அக்கரைப்பற்று கல்விக் கோட்டத்தில் 250 பேரும், அட்டாளைச்சேனை கல்விக் கோட்டத்தில் 260 பேரும், பொத்துவில் கல்விக் கோட்டத்தில் 236 பேரும் தபால் மூல வாக்ககளிப்பிற்கென தகுதி பெற்றிருந்தனர்.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் நாடு தழுவிய ரீதியில் ஏழு இலட்சத்து 12 ஆயிரத்து 319 பேர் தபால் மூலம் வாக்களிப்பதற்கென தகுதி பெற்றுள்ளனர்.

இதேவேளை, கிழக்கு மாகாணத்தில் 54 ஆயிரத்து 858 பேர் அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கு தகுதி பெற்றுள்ளனர். திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் 26 ஆயிரத்து 778 பேரும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 13 ஆயிரத்து 116 பேரும், திருகோணமலை மாவட்டத்தில் 14 ஆயிரத்து 964 பேரும் அஞ்சல் மூலம் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் தபால் மூல வாக்களிப்பு





**(ஹஸ்பர் ஏ.எச்)**

இலங்கையின் ஒன்பதாவது ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தபால் மூல வாக்களிப்பு நேற்று (05) காலை 8:30 மணிக்கு தம்பலகாமம் பிரதேசசெயலகத்தில் இடம்பெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெ. ஸ்ரீபதி முன்னிலையில் வாக்களிப்புகள் இடம் பெற்றன.

சுமார் 112 உத்தியோகத்தர்கள் பிரதேச செயலகத்தில் வாக்களிப்பதற்கு விண்ணப்பித்திருந்தனர்.

அத்துடன் சமூக நீர்வளங்கள் திணைக்களத்தில் இருந்து ஐந்து பேர் பிரதேச செயலகத்தில் வாக்களித்தனர்.

மொத்தம் 117 தபால் மூல வாக்காளர்கள் வாக்களிக்க விண்ணப்பித்திருந்தார்கள்.கட்சிகளின் முகவர்கள் இவ்வாக்களிப்பு நிலையங்களில் பிரசன்னமாகி வாக்களிப்பை கண்காணித்திருந்தனர்.

வாக்களிப்புகள் எவ்வித குளறுபடியும் இன்றி சுமுகமாக இடம் பெற்றன. எதிர்வரும் 21ம் திகதி ஜனாதிபதி தேர்தல் இடம் பெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# கொழும்பு சைவ மங்கயர் பெண்கள் கல்லூரி மாணவிகளின் பரதநாட்டிய அரங்கேற்றம்





**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

நந்தன நிர்ணயா நிறுவன இயக்குனரும், நடன ஆசிரியையுமான ஸ்ரீமதி தயானந்தி விமலச்சந்திரன் அவர்களின் மாணவியும், ஆசிரியர் ஜோன்ஸ்டன், இக் கல்லூரியின் பழைய மாணவியான சுதர்ஷினி தம்பதிகளின் புதல்விகளுமாகிய ரோஷினி ரக் ஷிலா, தஷானி ரக் ஷிலா ஆகியோரின் பரத நாட்டிய அரங்கேற்றம் வெள்ளவத்தை இராமகிருஷ்ணன் மண்டபத்தில் இடம்பெற்றது.

கொழும்பு சைவமங்கயர் பெண்கள் கல்லூரி மாணவிகளின் ரோஷினி, தசானி சகோதரிகளின் பரத நாட்டிய அரங்கேற்றத்தில் யாழ்பாணம், கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கல்லூரி அதிபர் சொல்லருவி சந்திர மௌலீஷன் பிரதம அதிதியாகவும், கொழும்பு சைவ மங்கயர் பெண்கள் கல்லூரி அதிபர் திருமதி அருந்ததி ராஜவிஜயன் கௌரவ அதிதியாகவும்ரகலந்து கொண்டனர்.



# மீனவர் வலையில் சிக்கிய சிவலிங்கம்



**( வி.ரி.சகாதேவராஜா)**

மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது வலையில் எதிர்பாராத விதமாக சிவலிங்கம் ஒன்று கிடைத்துள்ளது.

இச் சம்பவம் பெரியநீலாவணையில் இடம்பெற்றுள்ளது.

கிடைக்கப்பட்ட சிவலிங்கம் மீனவர்களால் அதே பகுதியில் பொருத்தமான மரத்தடியில் வைக்கப்பட்டது .

அது தற்போது மக்களால் வழிபடப்பட்டு வருகிறது.





வரலாற்று பிரசித்தி பெற்ற வெருகலம்பதி ஸ்ரீ சித்திர வேலாயுதர் சுவாமி ஆலய வருடாந்த மகோற்சவத்தின் கொடியேற்றத்திருவிழா நேற்று காலை பக்தி பூர்வமாக இடம்பெற்றபோது...

படங்கள். வி.ரி.சகாதேவராஜா

# இளைஞர்களின் பாவனைக்கு கையளிக்கப்படாமலே துருப்பிடித்து அழியும் சாய்ந்தமருது கரப்பந்தாட்ட மைதானம்




(அஸ்ஹர் இப்றாஹிம்)

விளையாட்டு துறைசார் நிபுணர்களின் ஆலோசனை பெறப்படாமல் சாய்ந்தமருது கடற்கரைப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள கரப்பந்தாட்ட மைதானத்தின் சுற்று வேலியும் கரப்பந்தாட்ட இரும்பு கம்பியும் துருப்பிடித்து அழியும் நிலைக்கு உள்ளாகி வருகின்றது.

நாட்டின் சகல பகுதிகளிலும் இலங்கையின் தேசிய விளையாட்டான கரப்பந்தாட்டத்தை பிரபல்யம் படுத்தும் வகையில் கிராமத்திற்கு ஒரு கரப்பந்தாட்ட மைதானம் அமைக்கும் திட்டத்தில் அடிப்படையில் சாய்ந்தமருதில் இம் மைதானம் அமையப் பெற்றுள்ளது.

சாய்ந்தமருதில் கரப்பந்தாட்ட மைதானத்தை அமைப்பதற்கு பொருத்தமான இடம் இருந்தும் மிகவும் நெருக்கமான இடத்தில் தற்போதய மைதானம் அமைய பெற்றுள்ளது.

சூரிய ஒளியின் தாக்கத்தை தவிர்க்க வடக்கு தெற்காக அமைய வேண்டிய மைதானம் கிழக்கு மேற்காக அமைய பெற்றுள்ளதால் காலையிலும் மாலையிலும் இம்மைதானத்தை பயன்படுத்த முடியாதுள்ளதாக விளையாட்டு துறைசார் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதே வேளை கரப்பந்தாட்டம் விளையாடும் எல்லை சீமெந்து கட்டாக அமைந்திருப்பதால் விளையாடும் போது வீரர்கள் உபாதைக்குள்ளாகும் சந்தர்ப்பம் அதிகமாக உள்ளது.

மக்களின் பாவனைக்கு இன்னும் கையளிக்கப்படாத இம் மைதானத்தை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனமெடுத்து பொருத்தமான இடத்தில் அமைக்குமாறு பிரதேச விளையாட்டு வீரர்கள் கேட்டுள்ளனர்.

# இலண்டனில் ஐங்கரன் விக்கினேஸ்வராவின் நூல்கள் வெளியீடு




இலண்டன் மாநகரில் ஐங்கரன் விக்கினேஸ்வராவின் நான்கு நூல்கள் எதிர்வரும் அக்டோபர் மாதம் வெளியிடப்பட உள்ளது.

பாலஸ்தீனம் எரியும் தேசம், ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல், தேசிய சுயநிர்ணயமும் ஐரோப்பிய சிறுபான்மை இனங்களும், இலங்கை இதழியலில் சிவகுருநாதன், ஆகிய ஐங்கரன் விக்கினேஸ்வராவின் நான்கு நூல்கள் வெளியீடு லண்டன் ஈலிங் அம்மன் கோவில் மண்டபத்தில் நடைபெற உள்ளது. (London Ealing Amman temple, 5, Chapel Rd, London W13 9AE, U.K)

எதிர்வரும் 26ம் திகதி அக்டோபர் 2024 சனிக்கிழமை மாலை 1600 முதல் 1830 மணி வரை இவ் வெளியீட்டு நிகழ்வு நடைபெற உள்ளது.

இந்நிகழ்வின் தலைமையுரையை இங்கிலாந்து சைவ மன்றங்களின் காப்பாளர் திரு. திரு. சிவா தம்பு அவர்கள் வழங்குவார்.

இந்நூல் வெளியீட்டு நிகழ்வில் வாழ்த்துரையை ஈழத்தின் மூத்த ஆவணக்காப்பாளர். திரு. பத்மநாப ஐயர், மற்றும் திரு. சி.கிருபாகரன், திரு. சண்முகதாசன் ஆகியோர் வழங்குவர்.

பாலஸ்தீனம் எரியும் தேசம் நூல் அறிமுகவுரையை திரு. திரு. பா. நடேசன் அவர்கள் நிகழ்த்துவார். அதன்பின் ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல் நூலின் அறிமுகவுரையை திரு. நா. சபேசன் அவர்கள் ஆற்றுவார்.

தேசிய சுயநிர்ணயமும் ஐரோப்பிய சிறுபான்மை இனங்களும் நூலின் அறிமுகவுரையை டாக்டர்.வே. ரவிமோகன் அவர்கள் ஆற்றுவார். அத்துடன் இலங்கை இதழியலில் சிவகுருநாதன் நூலின் அறிமுகவுரையை திரு. கோவிலூர் செல்வராஜன் அவர்கள் ஆற்றுவார்.

அத்துடன் இந்நூல் வெளியீட்டில் ஈழத்து சிற்றிதழ்கள் பற்றிய சிறப்புரையை திருமதி. மாதவி சிவலீலன் அவர்கள் வழங்குவார்.

இலண்டன் மாநகரில் நிகழும் இந்நூல் வெளியீட்டின் ஏற்புரையை திரு. ஐங்கரன் விக்கினேஸ்வரா அவர்கள் நிகழ்த்துவார்.

# பொலிஸாரால் விசேட பூஜை

தலவாக்கலை பி.கேதீஸ்

158 ஆவது பொலிஸ் தினத்தை முன்னிட்டு தலவாக்கலை பொலிஸார் தலவாக்கலை ஸ்ரீ கதிரேசன் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகளில் ஈடுபட்டனர். இதன்போது தலவாக்கலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சமந்த பெரேரா, பொலிஸ் உத்தியோகத்தர்கள் வர்ணசிங்க, யோகரட்ணம் ஆகியோர் கலந்துக்கொண்டனர்.



# மருந்து கொள்வனவில் உள்ள ஊழலை தடுப்போம் கவனயீர்ப்பு போராட்டம்



( வாஸ் கூஞ்ஞ)

நாடு பூராகவும் வைத்தியசாலைகளில் நோயாளிகள் தகுந்த முறையில் மருந்து வகைகளை பெற முடியாத நிலையில் இருந்து வருகின்றனர்.

இந்த நிலை மன்னார் வைதத்ணீயசாலைகளிலும் இடம்பெற்று வருகின்றது. நோளார்களுக்கு மருந்து வகைகளை வெளியில் பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கும்போது இதனால் வைத்தியர்களாகிய எங்களை பொது மக்கள் திட்டும் நிலைக்கு நாங்கள் உள்ளாகி வருகின்றோம். அரசானது வைத்தியசாலைகளுக்கு சரியான முறையில் மருந்து வகைகளை வழங்காமையால் நாங்கள் நோயாளர்களுக்கு தகுந்த பதில் அளிக்க முடியாத நிலையில் இருக்கின்றோம்.

இதனால் வைத்தியர்களாகிய நாங்கள் உண்மை நிலையை எடுத்தியம்பும் முகமாக கவனயீர்ப்பு போரட்டத்தை (03) நடாத்துகின்றோம். என போராட்டத்தில் கலந்து கொண்ட வைத்தியர்கள் தெரிவித்தனர்.

இந்த கவனயீர்ப்பு போராட்டம் செவ்வாய் கிழமை (03) மதியம் 12 மணி தொடக்கம் பிங்பகல் ஒரு மணி வரை மன்னார் பொது வைத்தியசாலைக்கு முன்பாக இடம்பெற்றது.

வைத்தியர்கள் இந்த போராட்டத்தின்போது தங்கள் கரங்களில் ஏந்திருந்த பதாதைகளில் 'நியாயமான குரல்களை நசுக்காதே' 'தொழிற்சங்க உரிமைகளை நசுக்காதே' 'மருந்து கொள்வனவில் உள்ள ஊழலை தடுப்போம்'போன்ற வாசகங்கள் காணப்பட்டன.

இக்கவன போராட்டத்தின்போது நோயாளர்களுக்கு எந்தவிதமான அசௌரியங்களும் இடம்பெறாத முறையில் சாப்பாட்டு நேர வேளையிலேயே இந்த கவனயீர்ப்பு பொராட்டம் இடம்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

# இலவச செயலமர்வுகள்



(தலவாக்கலை பி.கேதீஸ்)

சங்கராஜி நினைவு அறக்கட்டளையின் அனுசரணையில் கொட்டகலை கேம்பிரீஜ் கல்லூரி கணித, விஞ்ஞான பிரிவு உயர்தர மாணவர்களுக்கு இலவச செயலமர்வுகள் நடாத்தப்பட்டன. இதன்போது சங்கராஜி நினைவு அறக்கட்டளையின் மத்திய மாகாண இணைப்பாளர்களான ராஜ்குமார்,ஆமஸ்ரோங் ஆகியோர் கலந்துக் கொண்டிருந்தனர்.

# மாணவர்களுக்கு வரப்பிரசாதமான மோட்டார் வாகன பயிற்சிநெறி சம்மாந்துறையில் ஆரம்பம்!

## அதிபர் தியாகராஜாவின் முயற்சியால் விசேட அனுமதி!







**( வி.ரி. சகாதேவராஜா)**

கபொத சாதாரண தரம் பயின்ற மாணவர்களுக்கு வரப்பிரசாதமான மோட்டார் வாகன பயிற்சிநெறி ( auto mobile )சம்மாந்துறை தொழில்நுட்ப கல்லூரியில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

சம்மாந்துறை தொழில்நுட்ப கல்லூரியின் அதிபர் சதாசிவம் தியாகராஜா மேற்கொண்ட பெருமுயற்சியின் காரணமாக இலங்கையில் சம்மாந்துறை தொழில்நுட்ப கல்லூரிக்கு மாத்திரம் இதற்கான விசேட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதற்கான விசேட அனுமதியினை தொழில்நுட்ப பயிற்சி திணைக்கள பணிப்பாளர் நாயகம் எஸ். ஜெகத் வழங்கியுள்ளார்.

கல்வி அமைச்சால் நடைமுறைப்படுத்தப்படும் 13 + திட்டத்தின் கீழ் மோட்டர் வாகன தொழில்நுட்ப கற்கை நெறியின் அங்குரார்ப்பணவைபவம் நேற்று முன்தினம் (03.09.2024) சம்மாந்துறை தொழில்நுட்ப கல்லூரியில் சிறப்பாக நடைபெற்றது . ஒன்றரை வருட பயிற்சி நெறியான இதற்கு சம்மாந்துறை வலயத்தைச் சேர்ந்த சம்மாந்துறை முஸ்லிம் மத்திய தேசிய பாடசாலை, நாவிதன்வெளி அன்னமலை மகா வித்தியாலயம்,தாருஸ்ஸலாம் மகா வித்தியால மாணவர்கள் 25 பேர் கற்கைநெறிக்கு தெரிவு செய்யப்பட்டார்கள்.

அங்குரார்ப்பண நிகழ்வில் நிகழ்வு கல்லூரி அதிபர் சதாசிவம் தியாகராஜா தலைமையில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக சம்மாந்துறை வலயகல்விப் பணிப்பாளர் செபமாலை மகேந்திரகுமார் கலந்து சிறப்பித்தார்.

சிறப்பு விருந்தினராக சம்மாந்துறை பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் கலந்து கொண்டார். பயிற்சி நெறிக்கு பொறியியலாளர் எம்.ஹம்ஸா பொறுப்பதிகாரியாக செயற்படுகிறார்.

இப் பயிற்சி நெறியில் கலந்து கொள்ளும் மாணவர்களுக்கு மாதம் பத்தாயிரம் ரூபா கொடுப்பனவாக வழங்கப்படவிருக்கிறது. ஏனைய போக்குவரத்து சலுகைகளும் வழங்கப் படவிருக்கிறது.சமகாலத்தில் சர்வதேச ரீதியாக இப்பயிற்சி நெறிக்கு அதிக கிராக்கி நிலவுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# மன்னார் சாதனை படைக்க சாதனையாளர்கள் உள்வாங்கப்பட வேண்டும்

## பிரதி கல்விப் பணிப்பாளர் பி.ஞானராஜ்

**(வாஸ் கூஞ்ஞ)**

மன்னார் மாவட்டத்திலிருந்து பல்கலைக்கழகம் சென்று வெளியேறும் வைத்தியர் , பொறியியலாளர்கள் மன்னார் மாவட்டத்தில் சேவையாற்ற வேண்டும். இவ்வாறு பாடசாலைகளில் விளையாட்டில் சாதனைகள் படைத்து பாடசாலையை விட்டு வெளியேறும் வீரர்களை கழகங்கள் பயன்படுத்தி மன்னார் சாதனை படைக்கும் மாவட்டமாக உருவாக்கப்பட வேண்டும் என பிரதி கல்விப் பணிப்பாளர் பி.ஞானராஜ் இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கு மாகாண பாடசாலைகளுக்கான விளையாட்டுப் போட்டிகள் கடந்த வாரம் யாழ் துரையப்பா விளையாட்ட அரங்கில் இடம்பெற்றதில் மன்னார் கல்வி வலயம் தொடர்ச்சியாக மூன்று ஆண்டுகள் முதல் இடத்தை பிடித்ததை முன்னிட்டு வீரர்கள் மன்னார் கல்வி வலயத்தினால் கௌரவிக்கப்பட்ட நிகழ்வு செவ்வாய் கிழமை (02) நடைபெற்றது

இதன்போது மன்னார் கல்வி வலய பிரதிப் பணிப்பாளர் பி.ஞானராஜ் தொடர்ந்து உரையாற்றுகையில்

எங்களுடைய மாணவ வீரர்களின் திறமையும் சாதனையும் கௌரவிக்கும் முகமாக நாம் இன்று (02) ஒன்று கூடியுள்ளோம்.

இந்த வீரர்கள் தங்கள் இரத்தத்தை வியர்வையாக சிந்தியே எமது மன்னார் மாவட்டத்துக்கு பெருமையை ஈட்டித் தந்துள்ளனர்.

இவர்கள் மிகவும் கட்டுக் கோப்பானவர்கள். ஒழுக்கம் நிறைந்தவர்களாக காணப்படுகின்றனர்.

இந்த மாணவர்கள் எதிர்காலத்தில் நிலைத்து நின்று , தனித்து நின்று தாங்களாகவே வாழக்கூடியவர்கள்.

விளையாட்டுகளில் ஈடுபடுபவர்கள் கல்வியில் ஆர்வம் குறைந்து காணப்படுவர் என பலர் குறிப்பிடுகின்றனர். இது ஒரு அப்பட்டமான பொய்யாகும். கல்வியில் ஆர்வம் காட்டுபவர்களே விளையாட்டுகளில் வீரர்களாக திகழ்கின்றனர். கல்வியில் சித்தியடைகின்றனர். அத்துடன் பல துறைகளில் மிளிர்கின்றனர்.



மன்னார் மாவட்டத்தை பொறுத்தமட்டில் பல்கலைக் கழகம் செல்பவர்கள் பலர் விளையாட்டு வீரர்களாக திகழ்ந்து காணப்படுகின்றனர்.

விளையாட்டில் ஈடுபடுபவர்களை விட ஈடுபடாதவர்கள்தான் கல்வியில் நாட்டம் குறைவாக காணப்படுவது கடந்த கால ஆய்வாக இருக்கின்றது.

இந்த வகையில் வட மாகாணத்தில் எமது மன்னார் மாணவர்கள் எந்த வலயமும் காண்பிக்காத முறையில் ஒழுக்கம் உள்ளவர்களாக மாணவர்களுக்கேற்ற தன்மையில் இருந்தமை விளையாட்டு போட்டிகள் நடைபெற்ற இடத்தில் பலராலும் பாராட்டப்பட்டவர்கள்.

உண்மையில் இவர்களுடைய விளையாட்டுக்கள் மட்டுமன்றி ஒழுக்கச் சீறுள்ளவர்களாக இருந்தமைக்கு எமது கல்வி வலயப் பணிப்பாளர் , உத்தியோகத்தர்கள் , பாடசாலை அதிபர்கள் , ஆசிரியர்கள் , பெற்றோர் மற்றும் மாணவர் யாவரையும் நாம் மறந்துவிட முடியாது.

இங்கு நான் ஒரு ஆதங்கத்தையும் குறிப்பிட விரும்புகின்றேன். 18 மற்றும் 20 வயது மாணவர்கள் ஒவ்வொரு வருடமும் பாடசாலைகளை விட்டு வெளியேறுகின்றனர்.

இவர்கள் எங்கே செல்லகின்றனர்? கழகங்களுக்கு இடையே நடைபெறுகின்ற போட்டிகளில் மன்னார் மாவட்டம் முதல் இடத்தை பிடிக்க முடியாது திண்டாடுகின்றது.

பாடசாலை மட்டங்களில் சாதித்து மிக திறமையாக வெளியேறும் இவர்கள் கழகங்களில் பங்குபற்றுவது இல்லையா? அல்லது இவர்களை கழகங்கள் இணைத்துக் கொள்வது இல்லையா என்பது கேள்விக் குறியாக இருக்கின்றது.

இதையிட்டு நாம் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். கடந்த காலங்களில் வட மாகாணத்தில் ஐந்து மாவட்டங்களை கொண்ட வட மாகாணத்தில் மன்னார் மாவட்டம் ஐந்தாவது மாவட்டமாகவே காணப்படுகின்றது.

இவ்வாறு மன்னாரிலிருந்து பல்கலைக்கழகம் செல்லுபர்சளும் மீண்டும் மன்னாருக்கு திரும்பி வந்து சேவை செய்வதில் குறைவாகவே தெரிகின்றது.

இது எமது மாவட்டத்துக்கு ஒரு கேள்விக் குறியாகவே இருக்கின்றது. வெளி மாவட்டங்களைச் சார்ந்தவர்களே இங்கு வந்து சேவையாற்றுவதையே நாம் பார்க்கின்றோம்.

ஆகவே மன்னார் மாவட்டத்திலிருந்து பல்கலைக்கழகம் சென்று வெளியேறும் வைத்தியர் , பொறியியலாளர்கள் மன்னார் மாவட்டத்தில் சேவையாற்ற வேண்டும்.

இவ்வாறு பாடசாலைகளில் விளையாட்டில் சாதனைகள் படைத்து பாடசாலையை விட்டு வெளியேறும் வீரர்களை கழகங்கள் பயன்படுத்தி மன்னார் சாதனை படைக்கும் மாவட்டமாக உருவாக்கப்பட வேண்டும் என வேண்டி நிற்கின்றேன் என பிரதி கல்விப் பணிப்பாளர் பி.ஞானராஜ் இவ்வாறு தெரிவித்தார்.

# இடர்படும் குடும்ப மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள்

## அம்பாறை அரச அதிபர் வழங்கி வைப்பு





**( வி.ரி. சகாதேவராஜா)**

காரைதீவு பிரதேசத்தில் பொருளாதார ரீதியாக இடர்படும் 10 குடும்பங்களின் பிள்ளைகளுக்கு உலர் உணவு பொருட்கள் மற்றும் கற்றல் உபகரணங்கள் துவிச்சக்கர வண்டிகள் போன்றவற்றை அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்ரம வழங்கி வைத்தார்.

சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் ஒழுங்கமைப்பில் உதவி பிரதேச செயலாளர் எஸ்.பார்த்தீபன் தலைமையில் UNICEF PPCC நிறுவனத்தின் உளநல உதவி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இவ் உதவிகள் வழங்கி வைக்கப்பட்டன. சிறுவர் கழகங்ளை வலுப்படுத்தும் நோக்குடன் சிறுவர் நூலகங்களுக்குத் தேவையான பொருட்கள் புத்தகங்கள் கதிரைகள் மேசைகள் மற்றும் விளையாட்டு உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

# உயர்தர மாணவர்களுக்காக புகைப்படக் கலை செயன்முறைப் பயிற்சி

**(எம்.ஏ.றமீஸ்)**

அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி தேசிய பாடசாலையின் உயர்தரப் பிரிவில் தொடர்பாடலும் ஊடகக் கற்கை பாடத்தினை பயின்று வரும் மாணவர்கள் மத்தியில் புகைப்படக் கலையினை விருத்தி செய்யும் நோக்கில் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் அக்கரைப்பற்று பிரதேச செயலக கலாசாரப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட விஷேட செயன்முறைப் பயிற்சி கல்லூரியின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

அதிபர் ஏ.எச்.பௌஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது பிரதேச செயலாளர் ரி.எம்.எம்.அன்சார் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். உதவி பிரதேச செயலாளர் வை.ராசித், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எம்.தமீம், மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரி.முகம்மட் ரின்சான், மாவட்ட கலாசார ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் ஏ.எல்.தௌபீக், கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் என்.நவப்பிரியா, பாடசாலையின் உயர் தரப் பிரவு வலயத் தலைவர் எம்.ஐ.எல். பைஷல், அபிவிருத்தி உத்தியோகத்தர் பர்ஷானா சம்சுதீன் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் இதன்போது கலந்து கொண்டனர்.

காலத்திற்கு ஏற்ப மாணவர்களின் துறைசார் தேவைகளை கருத்திற் கொண்டு கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் அக்கரைப்பற்று பிரதேச செயலகம் ஆகியன இணைந்து அக்கரைப்பற்று தேசிய பாடசாலை மாணவர்களுக்கு இப்பயிற்சியினை வழங்க முன்வந்தமை தொடர்பில் இப்பாடசாலையின் அதிபர் தலைமையிலான ஆளணியினரும், கல்விச் சமூகத்தினரும் தமது நன்றியறிதலை தெரிவிக்கின்றனர்.

இதன்போது அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியில் தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் பாடத்தினை பயின்று வரும் சுமார் நூறு மாணவர்கள் கலந்து கொண்டு புகைப்படக் கலை தொடர்பிலான பயிற்சியினை பெற்றுக் கொண்டனர்.

புகைப்படக் கலை தொடர்பான சிறந்த அறிவும் அனுபவமும் கொண்ட வளவாளரான ஐ. ஹாதி ஹசன் தலைமையிலான குழுவினர் கலந்து கொண்டு புகைப்படக் கலை தொடர்பான விளக்கங்களையும் செயன்முறைப் பயிற்சிகளையும் மாணவர்களுக்கு வழங்கினர்.

புகைப்படத்துறையின் நுட்பங்கள், புகைப்படத்துறை வரலாறு, புகைப்படத்துறைப் பிரிவுகள் மற்றும் புகைப்படக் கலைத்துறையில் கையாள வேண்டிய அம்சங்களும் நடைமுறைகளும் போன்ற பல்வேறு விடயங்கள் கோட்பாடு ரீதியாகவும் செயன்றைகள் மூலமாகவும் இதன்போது மாணவர்களுக்கு தெளிவு படுத்தப்பட்டகை குறிப்பிடத்தக்கது.


ஜனாதிபதித்
தேர்தல்
2024
மில்லியன் கணக்கில் வாக்குகளை
பெற்று வெற்றிபெற
மில்லியன் கணக்கில்
வாக்காளர், பார்வையாளர்களைக்
கொண்ட சுபீட்சம் ஊடகத்தில்
குறைந்த விலையில்
விளம்பரங்களை வெளியிடுங்கள்
077 664 5232 / 077 311 2601